# ***ONGC PUBLIC SCHOOL, NERAVY , KARAIKAL***

Awakened Citizen Programe - ACP

9.03.2020 திங்கட்கிழமைஓஎன்ஜிசிபொதுப்பள்ளியில் இராமகிருஷ்ணாமிஷன் நடத்தும் (Awakened Citizen Programe - ACP) மதிப்புக்கல்விக்கானபயிலரங்கம்,காலை 10மணியளவில் விளக்கேற்றி, இறைவாழ்த்துப்பாடலுடன் இனிதேதொடங்கியது. இப்பயிலரங்கத்தில் 50க்கும் மேற்பட்டபள்ளியின் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.





ஓஎன்ஜிசிபொதுப்பள்ளியின் முதல்வர் திரு. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரைநல்க,விவேகானந்தர் படத்திற்குமலர் தூவிமரியாதைசெய்யப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குஓஎன்ஜிசிநிறுவனம்,காவேரிஅசட் காரைக்கால்,மனிதவளத்துறைபொதுமேளாளர் திரு. இரவிச்சந்திரன் அவர்கள் தலைமையேற்றார். சிறப்புவிருந்தினரையும் பயிலரங்கத்தைநடத்தவந்த இராமகிருஷ்ணாமிஷனின்பயிற்றுனர்களானதிருமதி. பியாசக்ரவர்த்தி,திருமதி. நந்தினிசேஷாத்திரி,திரு. இரமணன் அவர்களையும்கௌரவிக்கும் நிகழ்வுநடைபெற்றது. சிறப்புவிருந்தினர் தம் உரையில் இப்பயிலரங்கத்தின் பெருமைகளையும் பயன்களையும் விரித்துரைத்தார். பள்ளியின் தாளாளர் திரு. கண்ணன் அவர்கள் இங்குபயிற்றுவிக்கும் அனைத்துசெயல்பாடுகளையும் தவறாதுஅவரவர் பள்ளிகளில் செயல்படுத்திமாணவச்சமுதாயத்தைநன்முறையில் உருவாக்கஅனைத்துஆசிரியர்களும் ஒத்துழைக்குமாறுகேட்டுக்கொண்டார்.ஓஎன்ஜிசிபொதுப்பள்ளியின் துணைமுதல்வர் திரு. எட்வின் சாமுவேல் மற்றும் அமிர்தாவித்யாலயா,சின்மயாமற்றும் பலமுதல்வர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இரண்டுநாள் நடைபெற்றபயிலரங்கத்தின் சிறப்பம்சங்கள்:

- மாணவர்களிடம் இயல்பாகவும் எளிமையாகவும் ஆசிரியர்கள் பழகுதல் வேண்டும்.
- ஆசிரியர் கேள்விகேட்பதன் மூலம் அனைத்துமாணவர்களையும் பேசவைத்தல் வேண்டும்.
- வாரமொருபாடவேளை இத்திட்டத்திற்குஒதுக்கிதொடர்செயல்பாடாக இம்மதிப்புக்கல்வி இருத்தல் வேண்டும்.
- இதற்கானகலைத்திட்டத்தைஅவசியம் கடைபிடித்தல் வேண்டும்.
- பயிற்சிபெற்றஆசிரியர்களைக் கொண்டுஆறாம் வகுப்புமாணவர்கள் முதல் ஒன்பதாம் வகுப்புவரையிலானமாணவர்களைப் பயனடையச் செய்தல் வேண்டும்.
- முதல் வருடத்திற்கானபாடத்திட்டம் தற்பொழுதுஅனைத்துஆசிரியர்களுக்கும் கொடுத்துமாணவர்களைப் பயிற்றுவிக்கஅறிவுறுத்தப்பட்டது.
- ஆளுமைத்திறன் மற்றும் உலகளாவியசிந்தனைகளைமேம்படுத்தும் நோக்கில் மாணவர்களுக்குபயிற்சிஅளிக்கும் முறைகுறித்துஆசிரியர்களுக்குவிளக்கப்பட்டது.

பயிலரங்கம் நிறைவுநிகழ்ச்சியின் சிறப்பம்சமாக,





ஓஎன்ஜிசிநிறுவனம்,காவேரிஅசட் காரைக்கால்,மனிதவளத்துறைபொதுமேளாளர் திரு. ஜோசப் சகாயராஜ் அவர்கள் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்புவிருந்தினர் தம்உரையில் இராமகிருஷ்ணாமிஷனின் பெருமைகளையும் விவேகானந்தாகல்விக்கழகத்தின் பெருமைகளைப் பற்றியும் ACPபற்றியபயன்கள் குறித்தும் பேசினார். இந்தபயிலரங்கவிழாவில் ஆசிரியைதிருமதி. நந்தினிஆனந்தகுமார் வரவேற்புரைநல்கினார். அனைத்துப்பள்ளிஆசிரியர்களும் தமதுஅனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இந்த இரண்டுநாள்நடைபெற்றபயிலரங்கத்திற்குஒறுங்கிணைப்பாளரானபொறுப்பாசிரியைதிருமதி.
திவ்யா,அலுவலகபொறுப்பாளர் திரு. காமராஜ் மற்றும் குழுவினர்மிகச்சிறப்பாகபணியாற்றினர். இறுதியாகமாலை4.15மணியளவில் தேசியகீதத்துடன் நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிதேநிறைவடைந்தன.